UNIT - I

Sub Name - மொழியியல்

Class - I MA தமிழ்

Code - GETA 15A

# 1. மொழியும் மொழியியலும்

## மொழி

மொழி சமுதாயம் சார்ந்தது. மொழி இல்லையேல் சமுதாயம் இல்லை. அதே போன்று சமுதாயம் இல்லையேல் மொழியும் இல்லை. இந்த இரண்டறக் கலந்த உறவை அடிப்படையாகக் கொண்டே மொழியானது அது சார்ந்துள்ள சமுதாயத்தினையும் பண்பாட்டினையும் பிரதிபலிக்கும் கண்ணாடி என்று குறிப்பிடப்படுகிறது. இன்னும் குறிப்பிட்டு விளங்கும் நிலையில் மொழியானது மனித நாகரீகத்தோடும் சமுதாய உணர்வுகளோடும் பின்னிப்பிணைந்து இயங்கி வருகிறது என்றும் குறிப்பிடப்படுகிறது.

மொழி ஆற்றல் வாய்ந்த – கருத்துப் பரிமாற்றத்திற்கான தலையாய கருவி. மனிதனின் எண்ணங்களை, ஆசைகளை, சிந்தனைகளைப் பல்வேறு வகைகளில் ஏற்றவாறு வெளிப்படுத்தும் ஓர் ஒப்பற்ற சாதனமாகவும் இயங்கு தன்மை கொண்ட இயந்திரமாகவும் விளங்கி வருவது மொழியாகும். சில ஒலிகளை அவற்றின் சேர்க்கைகளின் வாயிலாகப் பல்வேறு முறைகளில் வடிவமைத்து, சமுதாயம் பொருளுள்ள கூறுகளாக ஆக்கி சமுதாய இயக்கத்திற்கு ஆதாரமாகவும் அடிப்படையாகவும் மொழியைப் பயன்படுத்துகிறது.

மொழி அது சார்ந்துள்ள சமுதாயத்திற்காகவும் பிற சமுதாயங்களோடு தொடர்பு கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இது பேச்சு வழக்காகவும், எழுத்து வழக்காகவும் அமைந்து சமுதாயத்தின் பல்வேறு பணிகளை நிறைவேற்றிடப் பெரும் பங்காற்றுகிறது. சில மொழிகள் பேச்சு மொழிகளாக மட்டுமே வழங்கி வருகின்றன. (தோடர் மொழி, கோத்தர் மெரி, லம்பாடி மொழி, நரிக்குறவர் மொழி போன்றவை). வேறு சில மொழிகள் பேச்சு வழக்கோடு எழுத்து வழக்கினையும் பெற்று விளங்குகின்றன. (தமிழ், மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம், மராத்தி, இந்தி, ஒரியா போன்றவை).

உலக மொழிகளில் சில செம்மொழிகள் என்று கொள்ளப்படுகின்றன. (கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், தமிழ்). சில மொழிகள் வளர்ந்த மொழிகளாகவும் (developed languages) வேறு சில மொழிகள் வளரும்

மொழிகளாகவும் (developing languages) கருதப்படுகின்றன. சில மொழிகள் தொன் மொழிகள்; இன்னும் சில பழங்குடி மொழிகள். சில மொழிகள் கல்வி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் சமய மொழியாகவும் பயன்பாட்டில் இடம் பெற்று விளங்குகின்றன; சில மொழிகள் உலகம் தழுவிய நிலையில் பல்வேறு செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மொழிகள் பாகுபாடு செய்யப்பட்டு, இன்று உலகின் பல பகுதிகளில் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காண்கிறோம். இம் மொழிகளையெல்லாம் முறைப்படிக் கற்பதும், கற்பிப்பதும் பயன்பாட்டில் ஈடுபடுத்துவதும் சமுதாயத் தேவையாக அமைந்துள்ளது. மொழிகளின் அமைப்பு தெளிவாக விளக்கப்பட வேண்டும். மொழிகள் ஒன்றோடொன்று ஒப்புமைப்படுத்தப்பட வேண்டும். மொழிகளின் தொன்மை நிலைநிறுத்தப்பட வேண்டும். மொழிகள் வளர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாறெல்லாம் மொழிகளைப் பற்றிய ஆய்வுகள் இன்றைய நிலையில் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாததாகிறது. எனவே, மொழிகளின் அமைப்பு, பயன்பாடு பற்றிய முறையான கல்வியும் ஆய்வும் மேற்கொள்ளப்பட வரையறை செய்யப்பட நெறிமுறைகள் தேவையாகின்றன. இத்தகைய நெறிமுறைகளை உருவாக்க அறிவியல் அடிப்படையில் அமைந்த அறிவுத்துறை தேவை. இதனை நமக்கு வழங்குவது மொழி அறிவியல் எனப்படும் மொழியியலாகும்.

## மொழியியல்

அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மொழியைப் பற்றிய கல்வி, ஆய்வு போன்றவை மொழி அறிவியல் என்றும் அறிவுத்துறை என்ற நிலையில் மொழியியல் என்றும் குறிப்பிடப்படுகின்றன. அதாவது linguistic science என்றும் linguistics என்றும் ஆங்கலத்தில் முதலில் வழங்கப்பட்டது. மொழிகளின் அமைப்பு எவ்வாறு வடிவம் பெறுகிறது. அந்த அமைப்பில் பங்கு பெறும் நிலைகள் (levels), கூறுகள் (features), அலகுகள் (units) போன்றவை என்னென்ன, இவற்றிற்கு இடையே காணப்படும் தொடர்புகள் யாவை, அவை எவ்வாறெல்லாம் தொடர்புபடுத்தப்படுகின்றன, இவ்வாறு தொடர்புபடுத்தப்படுவதால் முழுமையான மொழியமைப்பு எங்ஙனம் வெளிப்படுகிறது என்பனவற்றையெல்லாம் மொழியியல் அடிப்படையாக விளக்குகிறது. மற்றொரு நிலையில் மொழி எவ்வாறு சமுதாயத்தில் பங்கேற்று, சமுதாயத்தின் பல்வேறு முறைசார் மற்றும் முறைசாரப் பணிகளைச் செய்வதற்குத் துணையாக அமைகிறது என்பதை மொழிப் பயன்பாடு என்ற பிரிவின் கீழ் விளக்குகிறது. அதாவது மொழியமைப்பு (language structure) என்பதும் மொழிப் பயன்பாடு (language use) என்பதும் மொழியியலில் இரு பெரும் பிரிவுகள். ஒன்றை விட்டு மற்றொன்றை முழுமையாக விளக்குவதும்

அறிந்து கொள்வதும் அவ்வளவு எளிதாக அமைவதில்லை / முடிவதில்லை. இத்தகைய பேச்சு, எழுத்து என்ற இரண்டும் உற்ற தரவுகளாக அமைகின்றன. அதாவது பேச்சிலும் எழுத்திலும் இடம் பெறும் இலக்கியங்கள், செய்திகள், கருத்துகள் போன்றவையெல்லாம் மேற்குறிப்பிட்டவாறு ஒரு மொழியின் அமைப்பையும் அதனது பயன்பாட்டையும் அறிந்து கொள்ளவும் விளக்கவும் அடிப்படையாகின்றன.

மொழியமைப்பை விளக்கும் பிரிவு அமைப்பு மொழியியல் (structrual linguistics) என்றும் மொழிகளைப் பற்றி மேற்குறிப்பிட்ட பல்வேறு நிலைகளையும் செய்திகளையும் தொடர்புகளையும் எடுத்துக் கூறும் பிரிவு பொது மொழியியல் (general linguistics) என்றும் குறிப்பிடப்படுகின்றன. அடிப்படையில் மொழியியலில் மூன்று பெரும் பிரிவுகள் உள்ளன. 1) விளக்க மொழியியல் (descriptive linguistics) 2) வரலாற்று மொழியியல் (historical linguistics) 3) ஒப்புவமை மொழியியல் (comparative linguistics). ஒரு குறிப்பிட்ட காலச்சூழலில் வழங்கும் மொழியைப் பற்றிய விளக்கம் விளக்க மொழியியல் என்றும், பல்வேறு காலச் சூழல்களில் வழங்கிய மொழி வழக்குகளைப் பற்றிய வரலாற்று விளக்கம் வரலாற்று மொழியியல் என்றும், ஒரே மொழிக் குடுமபத்தை சார்ந்த மொழிகளின் பிறப்பு, தொன்மை, ஒப்புமை போன்றவை குறித்த விளக்கம் ஒப்புவமை மொழியியல் என்றும் வரையறை செய்யப்பட்டு முப்பெரும் பிரிவுகளாக அமைகின்றன. இன்னொரு வகையிலும் மொழியியலின் பெரும் பிரிவுகளை விளக்கலாம். அவையாவன.

1) கோட்டுப்பாட்டு மொழியியல் (theroretical linguistics)

2) பயனாக்க மொழியியல் (applid linguistics)

முன்னதில்மொழியமைப்பு பயன்பாடு குறித்த கொள்கை (principle) மற்றும் கோட்பாடு (concept) போன்றவை முறையாகவும் தெளிவாகவும நிறைவாகவும் விளக்கப்படுகின்றன. பின்னதில் இக்கொள்கைகளையும், கோட்பாடுகளையும் குறிப்பிட்ட மொழிச் சூழல்களில் பயன்படுத்தி மொழி விளக்கங்களையும் மொழிப் பயன்பாடு குறித்த செய்திகளையும் பெற முடியும். அதாவது கொள்கை, கோட்பாடு போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கம் பெறும் நிலையில் அது பயனாக்க மொழியியலாகிறது. ஒரு மொழியின் அமைப்பு விளக்கமானது மொழி கற்பித்தலுக்கு எவ்வாறெல்லாம் பயன்படும் என்று விளக்கும்போது அது அம்மொழியில் மேற்கொள்ளப்படும பயனாக்க மொழியியல் கல்வியாகவும் ஆய்வாகவும் அமைகிறது. அதேபோன்று பல்வேறு மொழியமைப்புகள் சமுதாயத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு, எடுத்துக்காட்டாக கல்வி, ஆட்சி, தகவல் தொடர்பு போன்றவற்றில் எவ்வாறெல்லாம் ஈடுபடுத்தப்படுகின்றன என்பதை விளக்கும் நிலையில் அது சமுதாய மொழியியல் என்று அழைக்கப்படுகிறது. மொழி விளக்கங்களையும்

ஒவ்வொரு மொழியும் அந்தந்த இனத்தின் தேவைகளுக்குத் தக்கவாறு அமைந்திருக்கிறது. நமது மொழியில் good morning / good evening போன்றவற்றிற்கு இணையான சொற்களோ,தொடர்களோ இல்லை. வணக்கம் என்ற சொல்லையே இவற்றிற்கு இணையாகப் பயன்படுத்துகிறோம். எஸ்கிமோ மொழியில் snow என்பதற்குப் பொதுவான சொல் இல்லை. ஆனால் snow என்பதன் பல்வேறு வகைகளைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் உள்ளன. இ அவர்களது வாழ்க்கைத் தேவை. அதே போன்று மீனவர் தமிழில் காற்று என்பதைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் அமைந்துள்ளன. இதற்குக் காரணம் அவர்களது தொழிலும் வாழ்க்கைச் சுழலுமேயாகும். எனவே, மொழிகளில் சொற்கள், தொடர்கள் போன்றவையெல்லாம் ஒரு வகையில் அம் மொழிகளைப் பயன்படுத்தும் சமுதாயப் பிரிவுகளின் அமைப்பு, தேவை, தொழில், வாழ்க்கை முறை, சூழல்கள் என்ற பல்வேறு காரணிகள் அடிப்படையிலேயே அமைகின்றன. பயன்பாட்டில் வந்து நிற்கின்றன எனக் குறிப்பிட வேண்டும். இதனால்தான் மொழியியல் அது வளர்ந்துள்ள சமுதாயத்தின்தேவைகளை நிறைவு செய்ய முடிகிறது.

இது போன்ற கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்பொழுது மொழிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வு காண்பது சரியாக அமையாது என்பதோடு பொருத்தமற்ற கொள்கை என்பதும் புலனாகும். ஒவ்வொரு மொழியும் அந்தந்தப் பண்பாட்டிற்குப் பொருத்தமானது. அந்தந்தப் பண்பாட்டை விளக்க அதைவிடச் சிறந்த மொழி ஒன்று அமைந்திருக்கலாம். மனிதன் செய்யும் எல்லாமே குறைவற்றனவாக இருக்க முடியாது. ஆங்கில மொழி ஆங்கிலேயருக்கும் அவர்களது பண்பாட்டிற்கும் ஏற்றது – தேவையானது. செம்மையானது. அதே போன்று தமிழர்களுக்கு அவர்தம் மொழி அமுத மொழி, செம்மொழி, வளர்ந்த மொழி. எனவே மொழியியல் உயர்வு, தாழ்வு என்று கூறும்பொழுது மொழி வெளிப்படுத்தும் பண்பாட்டின் உயர்வு தாழ்வையே குறிப்பிடுகிறோம். மொழி வேறு, இலக்கியம் வேறு ஆங்கில இலக்கியம் சிறந்தது என்னும் பொழுது மொழியைக் கூறவில்லை. அதாவது, அம் மொழியின் உள்ளஇலக்கியத்தின் உயர்வும் தாழ்வும் அம்மொழி சார்ந்த சமுதாயத்தின் அங்கமாகத் திகழும் சிந்தனையாளர்களையும் சான்றோர்களையும் பொறுத்ததே; மொழியைப் பொறுத்ததன்று.

இதே போன்று மொழிகளுக்கிடையே அழகினைக் காண்பதும் பொருளற்றது. மொழி அழகினை அளக்கப் போதுமான அளவுகோல் ஏதுமில்லை. மொழியின் பயன்பாடே, கருத்துப் புலப்பாட்டு ஆற்றலே, அதன் அழகாகிறது. எந்தச் சமுதாயமும் – மக்களும் தம் மொழியின் அழகிற்குப் பிற மொழிகள் ஈடாகா என்ற எண்ணத்தை – உணர்வை முழுவதுமாக விட்டுவிட முடியாது. என்றாலும் மொழியில் காணப்படும் அழகெல்லாம் அம் மொழி கொடுக்கும் பொருளில் காணும் அழகேயாகும். அதாவது மொழி, பண்பாடு

இவற்றைக் கருவியாகக் கொண்டு எழும் இலக்கியங்களில் காணப்படும் அழகேயாகும்.

எனவே, ஒரு மொழியின் ஆற்றல், வெற்றி என்பவையெல்லாம் அந்தச் சமுதாயத்தின் தேவைகளைப் பொறுத்தே அமைகின்றன எனலாம். தமிழ், தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்களுள் எவ்வித இடர்பாடுமின்றிப் பயன்படுத்திக் கொள்ள சிறப்பான முறையில் பயன்படுமாயின் அதுவே அதனது ஆற்றலுக்கு நிறைவிற்கு ஏதுவாகிறது எனலாம். இத்தகைய நிறைவினை – ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள உதவுவது மொழியியல் என்றால் அது மிகையன்று. மொழி ஆற்றல் சொற்களால், சொல்லமைப்புகளால், தொடர்களால், உரைக்கோவையால் ஏற்படுகின்றது. அதுமட்டுமின்றி மொழிப் பயன்பாட்டில் இடம்பெறும் களங்களின் சமுதாயத் தேவை, சமுதாய மதிப்பு போன்றவற்றைப் பொறுத்தும் ஏற்படுகிறது. மொழி வளர்ச்சி என்பதும் இவ்வாறு அமைவதோயாகும்.

மொழியியல் ஆய்வாளர், மொழியின் எல்லா வகைகளையும் பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, இலக்கிய வழக்கு என இனங்கண்டு விளக்க வேண்டும் – ஆராய வேண்டும். மொழியியல் ஆய்வாளரது ஆராய்ச்சிக்கு மூலப் பொருள் – தரவு இதுவே. பேச்சு மொழியின் உயிர்நாடி என்பதால் மொழியியல் ஆய்வாளர் முதலில் இதன் ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றனர். பின்னர் மொழியின் பல்வேறு கிளை மொழிகளை (dialects) ஆராய்கிறார். இவ்வகை ஆராய்ச்சியின் விளைவாகக் கிடைக்கும் மொழியின் அமைப்பினை ஒப்பிட்டு நோக்குகிறார். இதனால் பேச்சு மொழிகளில் காணப்படும் வேறுபாடுகள், பொதுமைகள் போன்றவற்றை எல்லாம் கண்டறிய வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வேறுபாடுகள் எதனால் தோன்றியுள்ளன என்பதையும் அறிய முடிகிறது.

## மொழியும் கருத்துப்பரிமாற்றமும்

கருத்துப் பரிமாற்றத்திற்கு அடிப்படையாக அமைவது. தேவையானது மொழியே பிற முறைகளில் கருத்துப் பரிமாற்றம் ஓரளவிற்கு நிகழும் என்றாலும் மொழியின் மூலம் நிகழும் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஆற்றலும் மதிப்பும் முக்கியத்துவமும் உண்டு. எனவே, மொழியைப் பல்வேறு மூலங்களின் வாயிலாகப் பயன்படுத்தி, கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது. சில மூலகங்களில் மொழியோடு காட்சிக்கும், உடல் மொழிக்கும் (sign/body language) சிறப்பிடம் தரப்படுவதைக் காண்கிறோம். என்றாலும் பேச்சு வழக்கும், எழுத்து வழக்குமே பெருமளவில் கருத்துப் பரிமாற்ற மூலங்களில் இடம் பெறுகின்றன.

கருத்துப் பரிமாற்றம் என்பது சமுதாய இயக்கத்திற்கு இன்றியமையாதது. இயங்கு தன்மை கொண்ட எந்தவொரு சமுதாயமும் ஏதேனும் ஒரு வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டிய கட்டாயம்

ஏற்படுவதோடு, அதனை மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. கருத்துப் பரிமாற்றத்தில் பங்கேற்கும் பேசுவோர், கேட்போர், எழுதுவோர், படிப்போர் பல்வேறு சமுதாயக் காரணிகளால் (கல்வி, தொழில், வயது, பால், இடம், பொருளாதார நிலை) வேறுபடுகின்றனர். மேலும், அவர்கள் பெற்றுள்ள மொழித்திறனாலும் வேறுபட்டு நிற்கின்றனர். ஒரே கல்வித் தகுதியைப் பெற்றுள்ளோர்கூட தங்களது கருத்து வெளிப்பாட்டில் ஒரே மாதிரியாக விளங்குவதில்லை. அவர்களுடைய மொழித்திறன் (linguistic competence) குறிப்பாக மொழி வெளிப்பாட்டுத்திறன் வேறுபடுவதால் கருத்துப் புலப்பாட்டுத்திறனிலும் அவர்கள் வேறுபட்டே நிற்கின்றனர். எனவே கருத்துப் புலப்பாடிற்கேற்ற வகையிலும் அதில் பங்கு பெறுவோரின் சமுதாய மற்றும் மொழிப் பின்னணிக்கேற்பவும் மொழி வழக்குகளைப் பயன்படுத்துவது கருத்துப்புலப்பாட்டின் ஆற்றல் மிகுந்த வெளிப்பாட்டிற்கு மட்டுமல்லாமல் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவோருக்கும் பயன் விளைவிக்கும் என நம்பப்படுகிறது. இதனால்தான் மொழிப்பயன்பாட்டில் எளிமையாக்கமும் விரிவாக்கமும், செம்மையாக்கமும் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

சமுதாயத்தில் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் பலர். இவர்களுக்கென்று ஒருவகையில் கருத்துப்பரிமாற்றம் நிகழ்கின்றது. ஆட்சித்துறையில் தரப்படுத்தப்பட்ட நிலையில் கருத்துப்பரிமாற்றம் நிகழ்கின்றது. பரவல் செய்தித் தொடர்பில் அனைத்து முறைகளிலும் மேற்குறிப்பிட்டவாறு அவ்வம் மூலத்தின் பண்பிற்கேற்ப மொழி பயன்படுத்தப்படுகிறது. திரைப்படங்களில், தொலைக்காட்சியில் வானொலியில் பயன்படுத்தப்படும் மொழிவழக்குகள் எளிமையாக்கம் பெற்றவை. விரிவாக்கம் கொண்டவை, செம்மையான மொழியில் அமைந்தவை. சில நேரங்களில் கருத்துப் பரிமாற்றம் கால அளவைப் பொறுத்தும் நிகழ்வதைக் காண்கிறோம்.

இந்நிலையில் மொழியமைப்பில் சில மாற்றங்களும் கூறுகளின் குறைப்பும் ஏற்படுகின்றன. ஏனெனில் இவையில்லாத நிலையில் கூட கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவோரால் கருத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்பதே. சில சமயங்களில் குறிப்பிட்ட சொற்கள் (மையச்சொல், கலைச்சொல்) அல்லது தொடர்களை மையப்படுத்தியும் கருத்துப்பரிமாற்றம் நிகழும். அதே போன்று குழுஉக்குறி, இரகசியமொழி என்ற அமைப்புகளைப் பயன்படுத்தியும் கருத்துப்பரிமாற்றம் நிகழ்த்தப்படுவதைக் காண்கிறோம். ஆனால், இவற்றின் பயன்பாடு அருகியதே, மொழியியல், மொழி வளர்ச்சியையும் கருத்துப் பரிமாற்றத்தையும் முன்னிறுத்தி சில கோட்பாடுகளை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மொழியும் இலக்கியமும்

இலக்கியமும் மொழியும் நெருங்கிய தொடர்புடையன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இலக்கிய ஆசிரியனுக்குக் கருவி, மொழியே. மொழி என்ற கருவியைச் சிறப்பாகக்கையாள்வதில் ஆற்றல் பெற்றபின் இலக்கியக் கருத்துப் பரிமாற்றமும் பிறவகைக் கருத்துப் பரிமாற்றமும் மொழியைப் பயன்படுத்துவோருக்கு எளிமையாகவும் ஆற்றல்மிக்கும் அமையும். இலக்கியம் சமுதாயத்தின் வெளிப்பாடு. எனவே, இலக்கியப் பொருண்மையும் அதனை வெளிப்படுத்தும் முறையும் தனித்துச் செயல்படுவன அல்ல என்பது தெளிவாகிறது. ஏனெனில் மொழிப்பயனபாடு என்பதே மொழி வெளிப்படுத்தும் பொருண்மையைப் பற்றியதுதான். பொருண்மை என்பதுகூட சமுதாய அமைப்பில் இயக்கத்தில் தோன்றிவரும் நிகழ்வுகளை ஒட்டியே அமைகிறது. ஆகவே, பொருண்மை, மொழி என்பனவற்றோடு சமுதாயம் என்ற கூறும் இணைக்கப்படுதல் வேண்டும்.

இத்தகைய இணைப்பில் இடம் பெறும் கூறுகள் ஒவ்வொன்றும் மற்றவற்றைச் சார்ந்தே அமைந்துள்ளதைப் பார்க்கலாம். அதாவது, ஒன்றைவிட்டு மற்றொன்றை விளக்குவது என்பதும் பின்பற்றுவது என்பதும் சரிவர அமையாது. அதனால் இத்தகைய இணைப்பில் சமுதாயப் பங்கு, அதன்வழி சமுதாயமும் மொழியும் பெறக்கூடிய பயன்கள் போன்றவையும் எடுத்துக்காட்டப்பட வேண்டும். எனவே இதுவும் ஒரு முக்கியமான குறிக்கோளாக அமைகிறது. ஓர் இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கக் கூடியது, அதன் தன்மையை வெளிக் கொணரவல்லது அதில் சொல்லப்பட்டுள்ள பொருண்மையேயாகும். இப்பொருண்மை சொல்லப்பட்டுள்ள முறையால் மேலும் பெருமை பெற, வளம் சேர்க்க வாய்ப்புள்ளது. சில இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள பொருண்மை சிறப்பாக அமைந்திருந்தாலும் சொல்லப்பட்டுள்ள முறை சிறப்பாக அமையாததால் அவ்விலக்கியங்கள் எதிர்பார்த்த பயனுள்ள விளைவுகளை ஏற்படுத்தாமல் போவதையும் நம்மால் காணமுடிகிறது.

பொருண்மையானது மொழி வழி வெளிப்படும்போது அப்பொருண்மையின் புலப்பாடு திறனற்றும், ஓரளவு திறன் கொண்டும், மிகுந்த திறன் கொண்டும் அமையக் காண்கிறோம். ஒரு குறிப்பிட்ட பொருண்மையேகூட வெவ்வேறு படைப்பாளிகளால் / பேச்சாளர்களால் வெளியிடப்படும நிலையில் ஒரு சிலவே சிறந்த ஆற்றல் பெற்று அமைகின்றன; சில திறனற்று அமைகின்றன.

எந்தவொரு இலக்கியமானாலும் பேச்சானாலும் அது கருத்துப் புலப்பாட்டில் திறன் உள்ள வகையில் வெளிப்படும்போதே அதன் சமுதாயப் பங்கும் பணியும் சிறக்கிறது என்பர் மில்லர் (1964). ஆகவே சமுதாயக்கண்

கொண்டு நோக்கும்போது இலக்கியங்களில் பொருண்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ள மொழியமைப்பு உத்திகள் போன்றவை நிறைவாகவும் ஆற்றல்மிக்கும் அமைந்தால்தான் அவ்விலக்கியங்கள் சமுதாயத்திற்கு ஏற்ற முறையிலும் பயன்படும் வகையிலும் அமைந்திடும் என்பதை உணர முடிகிறது. இதனைக் கருத்தில் கொள்ளாத இலக்கியங்களோ, கருத்துப் பரிமாற்றங்களோ சமுதாயத்திற்கு ஏற்புடையதாக அமையாமலும் சரியான முறையில் கருத்தை விளக்காமலும் அமைந்துவிடும்.

## மொழியும் அறிவுத்துறைகளும்

மொழி, மொழிக்காக மட்டுமல்ல, மொழியைப் பயன்படுத்திப் பல்துறை அறிவைப் பரப்புவதும் பலருக்கும் பயன்படச் செய்வதும் மொழியின் முக்கியமான பணியாகும். அறிவுத்துறைகள் எண்ணற்றவை; ஆயகலைகள் அறுபத்திநான்கு என்று குறிப்பிடுவர். இன்றையச் சூழலில் எத்தனையோ புதுத்துறைகள் ஆக்கம்பெற்று வளர்ந்து வருகின்றன. அத்துறைகள் பற்றிய கல்வியும் ஆராய்ச்சியும் அறிவுப் பரவலாக்கமும் இன்று வேகமாக நடைபெற்று வருகின்றன. என்றாலும் அறிவியல் போன்ற துறைகளில் வளர்ச்சியானது மிக வேகமாக மின்னல் வேகத்தில் ஏற்பட்டுவரக் காண்கிறோம். புதுமையாக்கம் செய்யப்பட வேண்டும்; தரப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்தால்தான் புது அறிவு சமுதாயத்திற்கு உரிய நேரத்தில் சரியான முறையில் கிடைக்கும் சென்று சேரும்.

பல்துறைக்கல்வி இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கொடுக்கப்படுகிறது. இவ்வறிவைக் கற்பிப்பதற்குத் தாய்மொழியோ பிறமொழியோ பயன்படுத்தப்படுகிறது. இந்நிலையில் பயன்படுத்தப்படும் மொழியின் அமைப்பும் ஆற்றலும் திறன்மிக்க வகையில் அமைந்திருந்தால்தான் கருத்துப்புலப்பாடு செவ்வனே அமையும். அவ்வாறு அமையாத நிலையில் அம்மொழியின் வளர்ச்சிக்காக மொழித் திட்டமிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. புதிய சொற்களும் கலைச் சொற்களும் உருவாக்கப்படுகின்றன. தொடரமைப்பிலும் உரைக்கோவை அமைப்பிலும் தேவைக்கேற்ப எளிமையாக்கமும் தரமாக்கமும் மேற்கொள்ளப்படுகின்றன. இருமொழி மும்மொழிச் சொல்லகராதிகள் உருவாக்கப்படுகின்றன. இத்தகைய மொழி வளர்ச்சிப் பணிகளெல்லாம் பல்துறை அறிவுப்பரவலாக்கத்திற்குத் துணை செய்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படை இன்றைய மொழியியலின் வளர்ச்சியே. அதுவும் குறிப்பாக, பயனாக்க மொழியியலின் ஆக்கமே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## மொழியும் மொழியியலும்

இதுவரை இப்பகுதியில் மொழி என்றால் என்ன, மொழியியல் என்பதன் விளக்கம் பயன்பாடு, மொழி–சமுதாயம், கருத்துப் பரிமாற்றம், இலக்கியம் அறிவுத்துறைகளின்தேவை, வளர்ச்சி, அவற்றில் மொழியின் பங்கு போன்றவை குறித்த விளக்கங்கள் குறிப்பிடப்பட்டன. என்றாலும் மொழியையும் மொழியியலையும் ஒருங்கிணைத்துச் சில கருத்துகளைத் தெளிவுப்படுத்திக் கொள்ளுதல் மொழியைப் பற்றியும், மொழியியல் என்ற அறிவுத் துறையைப் பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும். மொழி என்பது ஒரு கருவி, ஒரு பொருள் என்று முன்னர்க் குறிப்பிட்டோம். இதற்கென்று வடிவத்தையும் பயன்பாட்டையும் அதனைப் பயன்படுத்தும் சமுதாயம் கொடுத்துள்ளதையும் குறிப்பிட்டோம். வளர்ந்து வரும் அல்லது பழங்குடிச் சமுதாய அமைப்பில்கூட மொழி உள்ளது. இது போன்ற மொழிகளுக்கு இலக்கணம் உள்ளது. ஓரளவிற்குப் பயன்பாடும் உள்ளது. என்றாலும் இவை வரையறை செய்யப்படாமல் முறையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளன. வரையறை செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டால் இம்மொழிகளும் பிற மொழிகளைப் போல இலக்கணத்தையும் ஆற்றலையும் பெற்று, பல்வேறு முறைசார் சமுதாயப் பணிகளை மேற்கொள்ளும் அளவிற்கு வளர்ச்சி காண இயலும்.

சில மொழிகள் பழமையான மொழிகள், வரலாறு பெற்றுள்ள மொழிகள் என்றாலும் இன்றைய அறிவியல் போன்ற துறை அறிவினை எடுத்துச் சொல்வதற்கேற்ப இவற்றிலும் சில ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால்தான் அவற்றை இத்துறைகளின் கருத்துப் பரிமாற்றத்திற்கு உரிய முறையில் பயன்படுத்த வழி எற்படும். எனவே மொழித் திட்டமிடுதல் (language planning) பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதாகிறது. இதற்கு மொழியியல் துணை செய்யும்.

இதே போன்று மொழி வளர்ச்சிக்கென பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுதலும் இன்றைய இன்றியமையாதத் தேவையாக உள்ளது. மொழிகளில் புது அகராதிகள், கலைச்சொல் தொகுப்புகள், அறிவுத்துறைக்கான பாடப்புத்தகங்கள், பேரகராதிகள், மொழி பெயர்ப்புகள் போன்றவை எல்லாம் உருவாக்கப்படுதல் வேண்டும். இதற்கான கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் சமுதாய மொழியியல் கணிப்பான் மொழியியல், அகராதியியல், மொழிபெயர்ப்பியல் போன்ற பிரிவுகள் வழங்குகின்றன.

எனவே, மொழியியல் என்ற அறிவுத்துறை மொழிகளைப்பற்றி ஆராய்வதோடு மட்டுமின்றி மொழிகளின் பயன்பாடு பற்றியும் மொழி–சமுதாயம் போன்றவற்றிற்கான தொடர்பை வெளிக் கொணர்வதற்கும் உரிய சூழலை ஏற்படுத்தி, சமுதாய வளர்ச்சிக்கும் நாட்டு வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி வருகிறது.

✧ ✧ ✧